

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டாரம், ஜி.அரியூர் வட்டார ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்ட வட்டாரப் பொது சுகாதார அலகு கட்டிடத்தினை பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் 26.12.2024 அன்று திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன், கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், விழுப்புரம் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் து.ரவிக்குமார், உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜெ.மணிக்கண்ணன், பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் மரு.தி.சி.செல்வவிநாயகம் உள்ளிட்ட பலர் உள்ளார்கள்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வாழ்த்துக்களுடன் வனத்துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி திருவெண்ணைநல்லூர் வட்டம் பெரியசெவாலை செங்கல்ராயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் 2024–2025 ஆம் ஆண்டு கரும்பு அரவைப்பருவம் துவக்க விழாவில் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். மேலும் கருணை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். மாவட்ட ஆட்சியர் டாக்டர் சி.பழனி, மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி, சட்டமன்ற உறுப்பினர் அ.ஜெ.மணிக்கண்ணன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஆலை செயல் ஆட்சியர் முத்து மீனாட்சி, மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர்கள் பி.வி.ஆர்.சு.விஸ்வநாதன், ம. சந்திரசேகரன், ஒன்றிய குழுத் தலைவர் ஓம்சிவசக்திவேல் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

### உத்தரப்பிரதேசம் – மணிப்பூரில் பெண்கள் பாதிக்கப்பட்ட போது என்ன செய்தார்?

# அண்ணாமலை சாட்டையால் அடித்துக்கொள்வதை மக்கள் கேலிக்கூத்தாகப் பார்க்கிறார்கள்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!



சென்னை, டிச.29-

அண்ணாமலை சாட்டையில் அடித்துக் கொண்டு செருப்பு போடாமல் நூதன முறையில் போராடப்போவதாக கூறுவதை மக்கள் கேலிக்கூத்தாக பார்க்கிறார்கள். இது போன்ற செயலை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களிடம் கூறினார்.

சென்னை தேனாம்பேட்டையில் உள்ள அண்ணா அறிவாலயத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த அவர் கூறியதாவது:

அண்ணா பல்கலைக்கழகத்தில் ஆளுநரால் நியமிக்கப் படுகின்ற துணை வேந்தரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இது ஒரு தன்னாட்சி நிறுவனம். எடப்பாடி முதலமைச்சராக இருக்கும் பொழுது அண்ணா பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவியை நியமிப்பது முதலமைச்சருக்கு வழங்க வேண்டும்.. ஆக முழு பூசணிக்காய் சோற்றில் மறைப்பது போல மறைத்துவிட்டு எடப்பாடி பேசிக்கொண்டிருக்கிறார்.

**துணைவேந்தர் தெளிவுபடுத்திட வேண்டும்!**

அண்ணா பல்கலைக்கழகத்தில் 24 மணி நேரமும் பாதுகாப்பு வழங்க வேண்டியத் துணைவேந்தர் கீழ் இயங்கும் நிர்வாகத்தின் கடமையாகும். அங்கு பாதுகாப்பு காவலர்களை பணியில் அமர்த்தி இருக்கிறார்களா இல்லை அமர்ந்ததுபோல் கணக்கு காண்பித்து இருக்கிறார்களா என்பதெல்லாம் குறித்து பல்கலைக்கழக துணைவேந்தர் தெளிவு படுத்த வேண்டும்.

இந்த சம்பவம் நடந்து 6 மணி நேரத்தில் குற்றவாளியை காவல் துறை பிடித்துள்ளார்கள். அவரிடம் விசாரணை செய்து வருகிறார்கள். ஆனால் இவைகள் எல்லாம் திசைதிருப்பும் வகையில் பேசிக் கொண்டிருக்கின்ற எடப்பாடி அவரது ஆட்சியில் பொள்ளாச்சியில் 200க்கும் மேற்பட்ட பெண்கள் கதற கதற பாலியல் வன்கொடுமை உள்ளாக்கியவர்களுக்கு என்ன நடவடிக்கை எடுத்தார் எடப்பாடி?

**பெண் புகார் அளித்தார்!**

ஆகவே சம்பந்தப்பட்ட பெண் புகார் அளித்ததின் அடிப்படையில் உடனடியாக புலன் விசாரணை செய்து நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். இந்த நிலையில் அண்ணாமலை நூதன முறையில் சாட்டையில் அடித்துக் கொண்டு ஆர்ப்பாட்டம் செய்கிறார்.

பொள்ளாச்சியில் நூற்றுக்கணக்கான பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யும் பொழுது சாட்டை கிடைக்கவில்லையா. தற்பொழுது அவர் லண்டன் சென்று சவுக்கை வாங்கி வந்தது போல் தெரிகிறது.

தற்போது எந்த பதவியும் இல்லாமல் இருக்கும் அண்ணாமலைக்கு ஜோசியக்காரர்கள் யாரோ 40 நாள் சாட்டையில் அடித்துக் கொள்ள வேண்டும் என்று கூறியதால் இதை ஒரு சாக்காக வைத்துக் கொண்டு அண்ணாமலை இதை அறிவித்துள்ளார். இது ஒரு பகுத்தறிவு இல்லாத காட்டுமிராண்டித் தனத்தை காண்பிக்கின்றது.

**மணிப்பூரில் பெண்கள் பாதிப்பு!**

எனது 62 ஆண்டு அரசியல் வாழ்க்கையில் யாரும் இதுபோன்ற ஆர்ப்பாட்டத்தை செய்தது கிடையாது. இப்படி ஆர்ப்பாட்டம் செய்பவர் மணிப்பூரில் ஆயிரக்கணக்கான பெண்கள் பாதிக்கப்பட்ட பொழுது ஏன் அதற்காக குரல் கொடுக்கவில்லை.

உத்தரப்பிரதேசம் மற்றும் பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் அன்றாடம் இது போன்ற விஷயங்கள் நடைபெற்று வருகிறது. அங்கே எல்லாம் போகாதவர் இங்கு தமிழ்நாட்டில் செய்கிறார் என்று சொன்னால் இது ஒரு கேலிக்கூத்தாக இருக்கிறது.

தி.மு.க. ஆட்சியில் இருக்கும் வரை காலணி அணிய மாட்டேன் என்று கூறியிருக்கிறார். அப்படி என்றால் காலம் பூராவும் அவர் செருப்பே போட முடியாது. அண்ணாமலையின் செயல் மக்களுக்கு ஒரு கேலிக்கூத்தாக இருக்கிறது. அவர்கள் இதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள்.

தி.மு.க. அரசு பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கும் அரசு பெண்களுக்கு பாதுகாப்பு கொடுக்கிற அரசாக இருக்கிறது. அந்த குற்றவாளி தி.மு.க.வை சார்ந்தவர் என்று பெரிய குற்றம் சுமத்துகிறார்கள். ஆனால் அது முற்றிலும் தவறானது.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி செய்தியாளர்களுக்கு பேட்டியளித்தார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் – டிச.29 இன்று

# மாநில ஆதிதிராவிடர் நலக்குழு மண்டலக் கூட்டம்!

**ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. – வீ.ஜெகதீசன் – முன்னணியினர் பங்கேற்பு!**

பெரம்பலூர், டிச.29-

மாநில ஆதிதிராவிடர் நலக்குழு மண்டலக் கூட்டம்(9மாவட்டங்கள்), இன்று (டிசம்பர் 29), பெரம்பலூர் மாவட்டத்தில் நடைபெறுகிறது.

அது குறித்து ஆலோசனைக் கூட்டம், டிச.26 அன்று மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா.துரைசாமி தலைமையில், மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் குமார், துணை அமைப்பாளர்கள் தம்பை.தர்மராஜ்நடைபெற்றது. இந்த கூட்டத்தில், மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன், சட்டமன்ற உறுப்பினர் எம் பிரபாகரன் கலந்து கொண்டு பேசினார்கள்.

இன்று (டிச.29), பெரம்பலூர், தனியார் திருமண மண்டபத்தில் நடைபெறும் மண்டல கூட்டத்தில், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. மற்றும் இதில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி.இராஜேந்திரன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என். ராஜேந்திரன், பொதுக் குழு உறுப்பினர்கள் கி.முகுந்தன், பட்டுச் செல்வி ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், சன்.சம்பத், ஒன்றிய கழகச் செயலாளர்கள் எம்.இராஜ்குமார், எஸ்.நல்லதம்பி, தி.மதியழகன், சி.ராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், நீ. ஜெகதீஷ்வரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சு.தங்கராசு, மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர்கள் வரகூர். ராஜேந்திரன், தம்மை. தர்மராஜ், அசோக்குமார் உள்ளிட்ட பலர் கலந்து கொள்கின்றனர்.


